# ஆதி மார்க்க னீதி மொழி

September 2023

இதழ் 26 – செப்டம்பர் மாதம் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



**மூலமந்நிரம்**

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்னளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்னல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்னாலங்னளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்னள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்னள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, இருபத்தாறாவது இதழாக உங்கள் கைகளில் இலங்கிக் கொண்டிருக்கும் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணுச் சஞ்ஞிகை சர்வ மதங்களின் அடி நாதமாகிய மறலி கை தீண்டாமை என்னும் செயலுடைய நன்னம்பிக்கை என்பதனைப் பொதிந்து பொலிவுடனே மிளிர்ந்து வருகிறது. மக்களால் எளிதில் ஒழிக்க இயலாத மரண அவஸ்தையை மாற்றக்கூடிய அரும்பெரும் நிலைகளை உள்ளடக்கிக் கொண்டு சாகாக்கலை, சாகாக்கல்வி இவைகளை செயலுடைய அடிநாதமாக கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை.

நீதிமொழி என்பது இறைவனுடைய மொழி அல்லவா. அப்படியான நீதி மொழியின் ஒவ்வொரு திரு வார்த்தைகளும் இறைநிலையை உணர்ந்த நன்மக்களால் தொகுக்கப் பெற்று ஆதி மார்க்க னீதி மொழியாகத் திகழ்வதும், இசை மற்றும் திருவாக்கியங்கள் மூலமாக நிஜ நிரூபணை செயலாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் யாவரும் இதனை அனுபவிப்பதும் நிதர்சனம். எல்லாவற்றிற்கும் மேலாக சாலை ஆண்டவர்களால் 1946, 47, 48ஆம் வருடங்களில், அருளப் பெற்ற, தெய்வத் தேடு கூடகம் பல அரும்பெரும் நிலைகளை உள்ளடக்கி கடலொலிய தடமடுகற் காவியம்பூப் போனே என்பதற்கேற்ப, மாறாது ஒலித்துக் கொண்டே இருக்கும் கடலொலி போல், மனுத்தலை உள்ள காலம் வரை ஒலித்துக் கொண்டே இருக்கும். தேடுபாடுடைய தேடு கூடகர்கள் இருவர், அருட்பெருஞ்ஜோதியாக விளங்கும் ஆண்டவர்களை தேடி அடைவதற்கான வழியில் எவரையெல்லாம் சந்தித்தார்கள் என்பதையும், நரனாக இருந்த ஒருவனை, மனுவாக்கி, தேவனாக மாற்றும் நிலைகள் யாவற்றையும் பூமியடங்கலுக்கும் ஓதும் புராதனமாகக் கூறப் பெற்றுள்ளதையும், ஆமனு ஈசனே வந்து தேவர்க்கு அருளமுதம் தந்ததனையும், ஒரு நாடகம் போல் மிக மிக அழகாக தெய்வத் தேடு கூடகமாக சாலை ஆண்டவர்கள் சித்தரித்து அருளியுள்ளார்கள்.

பரமாத்ம இறைவனை சென்று அடைவதற்காக ஜீவனாகிய உயிரின் நெடும் வழிப் பயணம் என்பதே இதன் தேவரகசியமாக, மெய்யான குருகொண்டல் ஒருவரின் தயவால் அறியக்கூடிய ஒன்றாக உள்ளது. இதிலுள்ள உண்மைப் பொருளை போதுமான வரை எடுத்து கூறக்கூடிய அவையாக ஆதி மார்க்க னீதி அவை திகழ்வதின் அம்சமாக உதயமாகி வருவதே ஆதி மார்க்க



Copyright © AMNA Trust, Chennai 

**னீதி மொழி மின்னணுச் சஞ்ஞிகை. சாலை ஆண்டவர்கள் தங்களது அமுத கலைக்ஞான போதம் முதற் காண்டத்தில் வலம் வரவும் பலன் பெறவும் வழுத்துமிது வாய்க்கும் என அருளியுள்ள ஆசீர்பாத திருச்செயலானது சர்வ மனுக்குலமும் பெற்றுப் பலனடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை செயலாகக் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை. பிறவா முதல்வன் பிறந்து வந்து அருளிய பிறவா னெறியெனும் பிரகாசப் பொருளை, பிறவிப் பிணி தீர்க்கும் மாமருந்தின் மகத்துவத்தை தன்னுள் பொதிந்து பிரதி மாதமும் பிரகாசித்து வரும் இம் மின்னணுச் சஞ்ஞிகையை மக்கள் யாவரும் பார்த்துப், படித்துப், பயன் பெற, பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் பொற் பாதங்களை வணங்கி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

சாலை ரவி

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*மனிதனுக்கு மட்டும் விதி வைத்திருக்கிறான். பாவ புண்ணியம் வைத்திருக்கிறான். அண்ணன், தம்பி, அக்காள், தங்கை என்று பாகுபாடு வைத்திருக்கிறான். இதைப் போன்று மிருகங்களுக்கு விதி விலக்கில்லை. அவைகளுக்குப் பாவமில்லை. னமக்கு மட்டும் விதி விலக்கு ஏற்படுத்தி யிருக்கிறான் என்றால், இறைவனுக்கு னம் மேல் கோரமா?*

*இது னன்மை, அது தீமை, கள் குடித்தல் பாவம், பிறர் பொருளைத் திருடுதல் பாவம் என்று தடுக்கிறான். இவ்வித ஏவுதல் விலக்குதல்கள் வைத்தது ஒரு காருண்ய னாட்டத்தைக் கொண்டேதான். உன் தலைக்கு மேல் னிற்கிற உன் சாவை எண்ணிப்பார் என்கிறான். பாவத்தில் போகக் கூடாது என்கிறான், சாவைப்பற்றி அதிகமாக விசாரி என்கிறான். இவை எல்லாம் எதற்கு? னீ அந்த னித்தியத்தைக் கை போடுவதற்காகத்தான்.*

*~ சாலை ஆண்டவர்கள்*


Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 ஆகஸ்ட் மாத அவை நிகழ்வுகள் – 2023 செப்டம்பர் மாத வெளியீடு

**03-08-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்நமதிடத்தில் ஐம்புலக் கதவை...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் இருக்கும் ஈசனை அறியாமல் புறத்தில் தேடி அலையும் அறியாமை அகற்ற வந்ததுவே மதம். தன் னாமத்தின் உண்மைப் பொருளை உணர்ந்து, உண்மை அறிவை அறியும் வழிமுறையைப் போதிப்பதுவே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாகும்.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண்-118 தொடர்ச்சி :** பாரப் பெரிய கத்தியும் பஞ்சு தனக்கஞ்சும் எனும் பழமொழி போல் மங்காத வீரம் மலிவுற்ற மெய்யில் மெய்யை கைதவறவிடும் ஒரு பேடியை சிவராஜர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எமனுக்கும் அஞ்ஞாத நிஜனீதி ஆண்மையும், மங்ஙாத வீரமும் கொண்ட சிவராஜ செம்மல்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள மெய்யை ஆர்வ சித்தமுடைய மக்கள் தலையில் ஏற்றுகிறார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல் : அதிகாரம் விருந்தோம்பல்:** செவிச்சுவையின் மூலம் பிறவிப்பிணி போக்கி, பிறவாமை அளிக்கும் பெரியோர்களின் நாத மருந்தே விருந்து. விருந்தாகிய னாதத்தை அளிப்பவரே விருந்தாளி. அவரே இல்வாழ்வில் வித்தில்லா வித்தை விதைத்து சொல் ஏர் உழவு கொண்டு ஜீவப்பயிர் ஏற்றும் அகர வடிவினனான விவசாயி. அறிவை அறிவிக்கும் இத்தகைய விருந்தாளி நம் காலத்தில் எங்கே என்று தேடுபவனே மனிதன். முகமுகத்தில் குருவாக வந்து அகமுகத்தில் ஆவிப்பொருளாகிய இறைவனை போதிக்கும் சற்குருபிரானும் சிவனும் ஒன்றே.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 24: பட்டணத்தை யாளுகின்ற பஞ்ஞவர்கள் ராசாக்கள்...** பட்டணமும் தான் இரண்டு என உடலையும், ஜீவனையும் கூறுகிறார் சித்தர். பஞ்ஞுபுலன், பூதியங்களின் தலைவனே சிவன் எனும் வாடாத தீபம். **னான்** எனும் அகந்தை அறியாதவரிடம் அகங்காரமாக, அறிந்தவரிடம் பிரம்மமாக உள்ளது. அறிவு வடிவான மெய்குருவின் சொல் ஒரு பொருளே, பட்டணமாகிய ஜீவனை எமனிடம் சிக்காமல் காக்கிறது.

**குருபிரான் அருளமுதம்: ஆடிப்பெருக்கு:**
தேவாரம் கூறும், ஆலவாயான் திருநீறு எனும் ஆசானின் வாய்மையே ஆடிப்பெருக்கு, பதினெட்டாம் பெருக்கின் ரகசியமாக உள்ளது. தீர்த்தவாரி, கங்கா ஸ்னானம் எனும் ஆசானின் னாதமாகிய மங்காத திருநீறு பூசப்பெற்று, அதனை பெருக்கி, பதியாகிய எட்டுக்குள் மூழ்கி பிறவிப் பிணியிலிருந்து விடுபட்டு வாழ்வதை உணர்த்துவதே ஆடிப்பெருக்கின் சிறப்பு.

**தெய்வத் தேடுகூடகம் பக்கம் 232:** வினை மாற்றும் தேயா நிலத்தின் ரகசியம் அறிந்து விதியை மதியாக மாற்றி சின்முத்திரைச் சுவடியில் கையொப்பமிட்ட பெரியோர்களே பிரம்மகூடகர்கள் என துவார பாலகர் குறிப்பிடுகின்றனர். ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால் ஐம்புலக் கதவும் அடைத்து பத்தாவது வாசலில் வீற்றிருக்கும் மறுவிலா குகனை சந்திக்க வைக்கும் என்றும் உள்ளவராகிய சற்குரு பிரானை சேர்வோம் என கூறி **தேடிவ ரும்பொருளே - யாவருக்கும் தெய்வத்திருவுளமே...** என்ற பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai                                                    

**05-08-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஶ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகிவளர்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஓதுமறை என்பது வேத முடிவை தன்னில் அறிந்த மெய்ஞான மகத்துக்களின் திருவாய் மொழியின் மூலம் எழுதாத எழுத்தின் இரகசியம் அறிந்து வாய் மூடி, னினைவால் ஓதக்கூடிய பிரம்மவித்தை செயலாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண் 138 – 139 :**
**தைவம்** : நம்மை கவ்வி பிடித்துக் கொண்டிருக்கும் உயிரின் பிடியே தெய்வமாகும். னீதியெனும் பொருளே மூன்றாவது கண்ணாக, **ஆதி - மெய் - உதய- பூரண - வேதாந்நம்** எனும் பஞ்ஞாட்சர னிலையாக, ஆதியே துணையாக, புள்ளியதே அவர் வைத்த கூராகவும் னின்று விளங்குகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - கொலோசெயர் அதிகாரம் : 2**
திருவசனம் : 2 - *அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு அன்பினால் இணைக்கப்பட்டு தேவனுக்கும் கிருஸ்துவிற்கும் உள்ள உறவின் பூரண னிச்சயத்தினுடைய எல்லா ஐஸ்வரியத்திற்கும் உரியவர்களாக வேண்டும் என்றே விரும்புகிறேன்.* வேதங்களில் அருளப் பெற்றிருக்கும் இருதயம் என்பது தொண்டரின் சுத்த துறை இருதயமெனும் ஈசன் இருப்பிடத்தை குறிப்பதாகும். ஒரு மெய் குருபிரான் நம் இருதயத்தை பிளந்து காட்டிய பின் தான் கோடி சூர்ய பிரகாசத்தை தரிசித்து சர்வ ஐஸ்வர்யமும் பெற முடியும்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச்சட்டை னாயனார் - முன் ஞானம் - பாடல் எண் : 8 (தொடர்ச்சி) ஒத்து னின்ற ஓங்ஙாரம் மண்ணை உண்ணும்...** ஓங்காரத் தொனியான ஆசானின் னாதத்துடன் ஒத்து இருப்பவர்களே உயிர் ஒட்டிய ரகசியமான சமத்துவம், சமசரம், சமாதானம் இன்னதென அறிகின்றனர். மெய்யுணர்வு தூண்டப் பெற்ற அவர்கள், தங்களின் னரன் என்ற நிலை மாறி, செவியில் சுவை உணர்ந்த மனுவாகின்றனர். ஆசானின் உவட்டா அமுதுணவின் மூலம் புகழுடம்பை வளரச் செய்து புற உலக மயக்கம் தெளிந்து, பஞ்சபூத கலப்பால் ஆன சடம் **னான்** அல்ல என்பதையும், பஞ்ஞ பூதமும் கடந்த மூலாதார கணபதியே **னான்** என்பதையும் உணர்ந்து தேவப்பதம் பெறுகின்றனர்.

*ஜீவசகோதரர் கோபி:* **பரிணாம வளர்ச்சி - வீழ்ச்சி:** வளர்ச்சி என எண்ணும் மனித கண்டுபிடிப்புகள் அனைத்தும் பல எதிர்மறை விளைவும், வீழ்ச்சியுமே தருகிறது. மனிதன் தன் தேவைக்காக மாசுபடுத்தும் நீர், நிலம், காற்று மூலம் பல நோய்களும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. மேலும் மக்காத பிளாஸ்டிக் மற்றும் பல பொருட்களும் இயற்கை சீரழிவிற்கு காரணமாக இருப்பதும், அறிவை அறிந்தவர்கள் பார்வையில் பரிணாம வளர்ச்சி என்பது வீழ்ச்சியாக உள்ளது என்பதே னிதர்சனம்.

**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடு கூடகம் : தேடி வரும் பொருளே - யாவர்க்கும் தெய்வத் திருவுளமே...** மெய்ப் பொருளையும் வெகுமதி சுமையையும் சுமந்து, சொல் ஏர் உழவனாக வரும் பெரியோர்கள் னம்மை தேடி வந்து செங்கொடி உழவின் மூலம் னம் மனதை பண்படுத்தி தன்பெரு வெளியாகிய சாலையில் குடியேற்றுகிறார்கள். *ஒரு கொடி ஏற்றுவதற்கு இடம், கம்பம், துணி, கயிறு, ஏற்றும் ஆள் - இவை ஐந்தும் அவசியம்.* அது போல், *மண்ணாகிய நம் தேகத்தில் அறிவிருக்கும் தலமாகிய இடம், உணர்வெனும் கம்பம், மின் வீசும் கொடியாகிய னாதம், கயிறாகிய சரம், கொடி ஏற்ற வல்ல மெய் குருபிரான் ஆகிய ஐந்தும்*, ஆசான் தயவால் பெற்றவர்கள் நெடுங்கொடி ஏற்றி, எமனை மிதித்து, அரசாட்சி ராஜ்ஜிய பரிபாலனம் செய்து மெய்மதத்திற்கு உரியவர்களாகி மெய்வாழ்வு வாழ்கிறார்கள் என்ற அருளமுதப் பொழிவுடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai	

**06-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்**

*ஜீவசகோதரர் கௌதம்:* அகிலத்தில் அசல் பொருளையே விரும்பும் நாம், அகிலத்தை உண்டாக்கிய ஆண்டவனை மட்டும் நகலாக வணங்கவே எண்ணுகிறோம்.

**நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பந் சாத்தியே**
**சுற்றிவந்து முணமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா**
**நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்**
**சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ** என்கிறார் சிவவாக்கியர்.

அறுசுவையும் நறுமணமும் அவரவரிடம் அறிவிக்கும் ஆறாவது அறிவே ஜீவனாக சிவனாக விளங்குகிறது என்றும், வாசி என்பது குதிரையாக பெரியோர்கள் கைலாசம் சென்று வரும் வாகனமாக உள்ளது என்றும் கூறுகிறது வேதம். வேத நூல்களின் பரிபாஷை ரகசியங்களை அறிந்து கொள்ள பெரியோர்களின் இரக்கமே துணை.

**குருபிரான் அருளமுதம்:**
குருவைப் போற்றி வணங்கும் தோத்திரப் பாடல்கள் யாவற்றையும் மெய் உணர்வுடன் பாட வேண்டும். அமாவாசை எனும் புது நிலவு நாள் உலக இயக்கத்தின் ரகசியமாக உள்ளது. 27 நட்சத்திரங்களின் நாயகனாக விளங்கும் நிலவே மதியாக குருவாக உள்ளது. குருவின் சிறப்புரைக்கும் எழுவகை தோற்றம் யாவும் உணர்த்துவது எங்கும் நிறைந்துள்ள இறைவனையே.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே**

என திருமூலர் அருளியதையே, சாலை ஆண்டவர்கள், அண்டம் ஓர் அணுவின் உள்ளே காட்டிய, அணுவுக்குள் அணுவாய் அண்ட பிரம்மாண்டமாய், அணுவாண்ட பிரம்மாண்ட அணுவரசு அழியா வஸ்து அணுவதனை என அருளியுள்ளார்கள். "வேதம் என்பது சர்வ ஜாதி குல மத மனுத்தலைக்கும் சொந்தம். தன்னறிவில் சாயும் யாரும் வேதப் பதிக்குள் நுழைய இயலாது என்கிறது வேதம். மும்மலத்தால் மூடப்பெற்றுள்ள சித்த மலத்தை அறுத்து சிவமாக்கும் பிரணவக் கலையை தன் கைவசம் கொண்டவர்களே பெரியோர்கள். ஃ எனும் பிரம்மமே வள்ளுவர் கூறிய உலகின் அதிபதியாக உள்ளது. **எப்பொருள் எத்தன்மை தாரேனும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.** மெய்ப் பொருளைக் காணும் செயலுடைய அவையே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் சங்கர்:* உலகையே நமக்கு சொந்தமாக்கி வைத்திருக்கும் நம் உயிரின் இருப்பிடம் அறியாமல் இருப்பதே அறியாமையின் உச்சம். அதனை அறியும் தன்னை அறிதலெனும் செயலை ஒரு மெய் ஆசானின் இரக்கத்தாலும், நமது இணங்கிய சுபாவத்தாலும் தான் அறிய முடியும் என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*சர்வகுலங்களுக்கும் குலக்கோடிகளுக்கும் ஆங்கு அந்த க்ஷணமே தாரகமாய் விளங்கி னிற்கின்றார்; ஆதலால் அச் சற்குருவை அறிந்து மூன்று காலமும் வந்திக்கவேண்டும்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**06-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா கண்ணன்**

**திரு வளரும் திசையில்லாத் தலத்தின் பாதம்...** என்ற குருமுறாதிப் பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தது.

*ஜீவசகோதரி லலிதா:* எழுதாத எழுத்தாக இருக்கும் பிள்ளையார் சுழியே நெஞ்சகமாகிய நடுவீட்டில் புதையலாக இருக்கும் புராதன சொத்து. அதுவே திருவடியாக உயிர் சக்கரமாக உயிர்க் களிப்பாக அகரமுதலாக உள்ளது.

**ஆதியந்த மூல விந்து நாதமைந்து பூதமாம்**
**ஆதியந்த மூல விந்து நாதமை ந்தெழுத்துமாய்**
**ஆதியந்த மூல விந்து நாதமேவி நின்றதும்**
**ஆதியந்த மூல விந்து நாதமே சிவாயமே** **(சிவவாக்கியர்)**

ஐம்பூதங்களின் தோற்றத்திற்கும் முடிவிற்கும் காரணமாக, ஐந்து எழுத்து மந்திரமாக, சிவ சக்தியாக, ஒலி ஒளியாக மற்றும் செவிச் சுவைக்கு மூலமாக விளங்குவதே விந்துநாதம். **பரிக்குள் னின்ற அகரமுதல் ஐங்னாயத்தைப் பழம்பகவன் வெளிமனுக்கு உணர்த்த வேண்டி விரித்தெழுத்து அகர முதலெழுத்துக் கேறோ (அமுத கலைக்ஞானபோதம் இரண்டாம் காண்டம்)** அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் என்னும் பஞ்ஞாட்சர நிலைகளை உள்ளடக்கிய ஓங்காரமே புகழுடம்பு, பிரணவசொரூபம், கலிமா, காயத்ரி, எழுதாத எழுத்து என எல்லாமாகத் திகழ்வது. அதுவே அகரமும் உகரமும் சேர்ந்த அவ்வுக்குள் நின்று ஆடும் பாதமாக அகர முதலாக இருப்பது. அஞ்சாத சொல்லிருக்கும் சன்னிதானமாகத் திகழும் வேதகுல னாத சன்னதியில் இருந்து வரும் கொண்டல் வாய்மையானது பூட்டும் திறவுகோலுமாக, கேள்வியும் பதிலுமாக, உயிர்ச் சுவையாக வந்து ஆவிடை யோனியில் ஏங்கி நிற்கும் மக்களுக்காகப் பொழிகின்றது. கலைவாணித் தாய் குடியிருக்கும் ஆதியின் நாவு கொண்டருளும் அவ் வாக்கானது குருடாயிருந்த அகக்கண்ணிற்கு ஒளியும், மனம் தளர்ந்த முடவனை நடக்க வைப்பதாகவும், அறியாமையில் இருந்த ஊமையை அறிவுத் தெளிவில் பேச வைக்கும் ஒன்றாக தெளிந்த தெள்ளமுதமாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:**
**ஆதியா மில்மை யறிவதற்கே யன்றியிஃ**
**தோதும றைப்பயனொன் றில்** **(ஞானக் கொரல்)**

இல்மு எனும் கல்வி, படிக்காத பாமரனும் பழகக்கூடிய ஒன்றாக இருப்பது. முன்னே துவர்க்கும் பின்னே இனிக்கும் பாஷை என சாலை ஆண்டவர்கள், தமிழ் எழுத்துக்களின் சிறப்பைச் சொல்லும் பாடலாக **கோடாக எழுதும் பிரான் திருப்பாடமது** என்ற பாடலை அருளியுள்ளார்கள். எழுத்தெலாம் பிறந்து எழுத்தெல்லாம் கடந்து எழுதாத எழுத்து என்னும் ஏகநாயக தத்துவ ரகசியத்தை உணர்ந்து கொள்ள உண்டாக்கப் பெற்றதே எழுத்தன்றி, அது கடந்து விளங்குபவனே இறைவன். 18 மெய்யெழுத்துக்களும் அகரம் என்ற உயிர் எழுத்து வந்து அமர்ந்த பின்பே உயிர்மெய்யாக மாறுகிறது. மொழி என்பது ஒரு இனத்தின் குறியீடு. மொழிகளெல்லாம் கடந்த மெய்ஞ்ஞான நிலையில் நம்மை ஆக்கிடவே ஆண்டவர்கள் தங்கள் நூலில் பிரம்மவித்தைச் செயலை எழுதாத எழுத்தாக அருளியுள்ளார்கள். அதில் ஆகி இருக்கிறோம் என்பதே மகாசங்கல்ப மந்திரத்தின் செயலாக உள்ளது. அதில் மனம் அலையாமல் பிரதிஷ்டை பண்ணும் செயலையே வள்ளல் பெருமான் **பிரதிஷ்டாகலை** என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கணேசன்:* முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளும் மனதை ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படையாக உள்ளது. ஆதிசக்தியாக வரும் அண்ணல் அருளும் சீதனம் கொண்டே நாம் அவ் வாய்மையை அறிய முடியும். அகரம் **அ** எனும் எழுத்தாக அல்லாமல் உயிர் எழுத்தாக சுழியும் கோடுமாக செயலுள்ள ஒன்றாக உள்ளது என்ற பகிர்வுடனும், தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai September 2023

**10-08-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பூர்ணிமா ஜீவானந்தம்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **எண்ணு கின்றனல் லெண்ணம னைத்தையும்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

சர்வ சம்பத்தும் உள்ள நினைவெனும் ஆகாயத்தில் எண்ணும் நல் எண்ணங்களே மேன்மையான வாழ்வு தரும். வண்ண ஞான சித்தர் வரும் காலம் அவரவரின் மகா மகசூக்காகிய இருதயத்தில் என்பதை உணர்ந்தவர்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள்.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் - 118 தொடர்ச்சி :** எழுத்தாலாகிய வேதத்தை உண்டாக்கிய மனித தூலத்தை உண்டாக்கிய வஸ்துவித்தே, எழுதாமறை. அதுவே வேத முடியாகிய ஐம்மணிப் பொதிகையான பஞ்சாட்சரம். இதை பிரகாச ரூபமாக இதயத்தில் சந்திக்க வைப்பதுவே மெய்வழி. இதயத்தை திறந்து காட்ட வல்ல ஒரு மெய் குருவின் அருளால்தான் ஐவழி விளைவுக்கு அப்பால் உள்ள செய்வழி காட்டி உய்வழி கூட்டும் மெய் வழியை அறிய முடியும்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல்**
**இனியவை கூறல் :** பரிசுத்த ஆவி அருளும் சுவிசேஷ நற்செய்தியே இனியவை கூறல் என்கிறது சத்திய வேதம். அதுவே செவிச் செல்வம். உடலில் உயிரின் இனிமையை உணர்த்தி ஞானிகள் நித்திய உலகிற்கு நம்மை ஏற்றி அருள் பாலிப்பதே இனியவை கூறல்.

1. நித்திய உலகில் நம்மை வாழவைக்கும் மெய் ஆசானின் வாய்மையே பேரின்பம்.
2. தோற்றம் பார்க்கும் முக தாட்சண்யமே முகனமர்ந்து என்பதாகவும், செய்யும் செயலை வைத்து அகத்தின் தன்மை காண்பதே அகனமர்ந்து என்பதாகவும் உள்ளது.
3. அறம் என்பது அகம் சார்ந்து புறம் நோக்கா நன்மை செய்யும் இனிய செயலாகும்.
4. இந்த துக்க உடல் இருக்கும் போதே அழியா திருநாட்டில் குடியேற்றி வைக்கும் ஆசான் செயலே இன்பமாகும்.
5. குருபிரானின் இன்சொல் பெறுதற்கு அவரிடம் பணிவாக இருப்பதே மிகச்சிறந்த அணிகலன்.
6. மாய வலையில் நம்மை சிக்க வைக்கும் மனமே அல்லவை. அது தேய்வதற்காக ஆசான் கூறும் இன் சொல்லே நல்லவை.
7. குருபெருமானின் இனிய சொல்லே, நாம் செய்யும் செயல் யாவும் பண்புடனும் பயனுடனும் இருக்கச் செய்யும்.
8. இன் சொல்லாகிய ஆசானின் நாதமே நம் சிறுமை எண்ணங்களை நீக்கி நித்திய பேரின்பம் அருள்கிறது.
9. இன்சொல் வன்சொல் எது என்பதை ஆசான் அருளும் இன் சொல் மூலமே அறியலாம்.
10. இறைவனை அடைவதற்கான ரகசியமே உளவு. அது இருக்கும் அந்தரங்கமே பொன்னரங்கம். அங்கிருக்கும் சிவபோக ரகசியம் அறிவித்து நரனை மக்களாக்கி மக்களை தேவராக்கும் வல்லபம் உள்ளதே ஆசானின் இன்சொல்.

**குருபிரான் அருளமுதம்:**
ஆகாய அம்சத்தில் இருக்கும் பரிசுத்த ஆவி அறிவிக்கும்அதி விசேஷ செயல்களே சுவிசேஷம். உயிரின் இனிமையை உணரும் மனுவுக்கு அதை உணர்த்தும் குரு பிரானின் ஒரு சொல்லாகிய செம்பொருளே இனியவை கூறல். மனம் அலையாமல் பாதுகாக்கும் செயலே அறம். அனித்திய உடல் அனுபவிக்கும் இன்ப துன்பம் யாவும் நிரந்தரமல்ல. சிற்றறிவு கொண்டு உடலால் அனுபவிப்பது சிற்றின்பம். குருவருளால் பேரறிவு கொண்டு உடல் கடந்து அனுபவிப்பது பேரின்பம். அலையும் நம் மனதை வெறுத்து ஞான பதத்தில் நம்மை ஏற்றி வைக்கும் ஆசான் சொல்லே இன்சொல்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண்-25: ஆகாப் புலையனடி அஞ்ஞானந் தான்பேசிச்...** விதி வசத்தால் வீணாகும் நாட்களை எண்ணி வருந்துவதை சித்தர்



Copyright © AMNA Trust, Chennai 

குறிப்பிடுகிறார். அழி உடலை தான் என எண்ணி நம்பிய தன் உயிர் தற்கொலை செய்பவரை புலையர் என்கிறார். அறிவு கூரோங்கும் செயலே ஞானம். ஆசான் அருளால் மதிகொண்டு விதியை வெல்வதே தன்னை அறிதல்.

**குருபிரான் அருளமுதம் :** ஆசான் அருளால், சத்தம் பிறக்கும் இடம் ஆகிய இறைவன் இருக்கும் இடத்தை அறியும் அறிவே ஆறாவது அறிவு. மதியாகிய ஆசானை விட்ட குறையே தொட்ட குறையாகிய விதியில் நாம் சிக்குவதற்கு காரணம்.



**தெய்வத்தேடு கூடகம் பக்கம் 235:** திருவீச்சென்னும் சிவசிகர குரசலங்கிர்தப் பிழம்பென்னும் அதி மகோன்னதை எல்லையில் இருந்து அகலாமல் ஆள்பவரே பாண்டியனாகிய ஆண்டவர்கள். மெய் மதமாகிய ஜீவன் ஒன்றே ஒன்றுதான். வித்தில்லா வித்து விழுமிடமே முதலாக உள்ளது. நான்கு யுகங்களின் ரகசியமும் நம் ஜீவாதார ஆட்டமாக உள்ளது. பரிசாக வரும் குருவை பெறும் போதே நம் தேகாலயம் தேவாலயம் ஆகிறது. கோடி கடந்த காமக் கோடியின் முனையிலுள்ள ஹயாத்தாகிய ஜீவனை சிவபோகத்தால் பெற்ற பிரம்மகூடகர் சந்திக்கும், முமூச்சுமார்கள் கைலாயத்தை தமக்கு சொந்தமாக்கிக் கொண்டவர்கள், என்றும் அழியாத மாயா மெய்வழிச் சாலையின் மகதி அண்ணலை அறிவுக்கண் கொண்டே காண முடியும், என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

### 12-08-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
### தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

மெய்மணம் கமழும் சுருதிப்பெருமானின் **அந்நமேசிந் நைபதிந்ந சந்நனகந் நங்நமழும்...** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபெருமான் அருளமுதம்:** எழுத்தறிவித்த இறைவனாம் சாலை ஆண்டவர்கள், இப்பாடலில் **ந்** எனும் அறிவு குறித்தே அருளியுள்ளார்கள். ஆசானின் சந்நன கந்நங் கமழும் நாவின் மெய்ம்மணமே, நம் மனதின் பற்றறுத்து சுத்த அறிவாக்கி அந்தர் மாமுகமாய் சிவசந்நிர வசந்ந னிலையை தரிசனையாகக் காண வைக்கிறது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 140:** மரணக்குளிரை மாற்றும் தீ னீதி. இதயாசனத்தில் உள்ள தெய்வ மலரில் உன்னை ஏற்றி வைக்கும் படிப்பே மலர்மிசை ஏகுதல். னீதியை அறிய வைக்கும் ஆசானின் வாக்காகிய ஜோதியே, நம் ஆறாவது அறிவை அறியவைத்து மரணக்குளிரை மாற்றும் தீயாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் : தெசலோனிக்கேயர் - 1:19,20,23** *ஆவியை அவித்துப் போடாதிருங்கள். தீர்க்க தரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள். உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் யாவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்று இருக்கும்படி காக்கப்படுவதாக.* தீர்க்கதரிசனமான உயிர், உயிரான பிராணன் எனும் ஆவி, சரீரமெனும் உடல் யாவும் குற்றமாக அவிந்து வீணாவது, கர்த்தராகிய குருவின் பரிசுத்த ஆவியால், வீணாகாமல் காக்கப் பெறுகிறது.

**குருபெருமான் அருளமுதம்:** ஆவி-ஆத்துமா-சரீரம் என்பது குருவருளால் பிதா-சுதன்-பரிசுத்த ஆவியாக மாற்றப் பெறுகிறது. குருவே ஞானத்தந்தை என்றாலும் **துப்புரவாக உன்னுள் துலக்கும் ஆசான்** ஆன பிதாவின் மூலமே ஞானப்பிறப்பு உண்டாகிறது. ஹோலிகிராஸ் எனும்



Copyright © AMNA Trust, Chennai 

வணக்கத்திற்குரிய பொருள் அவரவர் முகத்தில் அடையாளக் குறியீடாக உள்ளது . ஆவிக்குரிய சிந்தனை என்பது அறுசுவை கொண்டு ஒளிக்கும் இடமாக, சமாதானம் சமத்துவம் இருக்கும் இடமாக உள்ளது.

*ஜீவசகோதரர் கோபி:* **ஸ்ரீமத் பகவத் கீதை - விஸ்வரூப தரிசன யோகம்:** ஓரறிவாக விளங்கும் வேர் மேலும் தலைகீழுமான கற்பகவிருட்சம் குறித்தே கோவில்களில் மரங்கள் தலவிருட்சமாக உள்ளது. ஐந்தறிவு இன்னதெனக் காட்டும் ஆறாவது அறிவே, ஓரறிவான அக்கெனும் பிரம்மமாக உள்ளது. விஸ்வரூப ஜோதி தரிசனம், இஸ்லாத்தின் **லாம்**, பகவத் கீதையின் கற்பக விருட்சம் யாவும் அடி-முடி-நடுவின் ரகசியமாக, அவரவரும் அகமியமாகக் காணும் விஸ்வரூப தரிசனையாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** தீபத்தின் சுடர் மேல் நோக்கி இருப்பது போல், ஜீவனே சிவன் எனும் வாடாத தீபமாக அவரவருள் இலங்குகிறது. விஷ்ணுவும் பிரம்மாவும், சிவனின் அடி முடி காணச் சென்றதும், வாமன அவதாரத்தில் உலகளந்ததும், அர்ஜுனன் கண்ட விஸ்வரூபக் காட்சியும் அடி-முடி-நடுவின் ரகசியம் உணர்த்தும் செயல்களே. பசுவாகிய ஆன்மா எனும் ஜீவனை அகக்கண் கொண்டு தரிசிக்கும் விஸ்வரூப தரிசனையே கோ பூஜை என்பதாகும்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச்சட்டை நாயனர்**: **முன்ஞானம் பாடல் – 9 : பாரப்பா அகாரமுத லுகாரங் கொள்ளும்...** ஆசானின் திருநாவிலிருந்து எழும் னாதமானது ஆவிடையெனும் தேவயோனியில் நுழைந்து செவிபோகமாக அனுபவிப்பதே அகர முதலாகும். அகரமுதலின் துணையுடன் அகர, உகர, மகார, விந்து, நாத நிலைகளும் உணர்வதே மெய்க் கல்வியாகும். புலன்கள் விந்தாகவும், பொறிகள் நாதமாகவும் உள்ள பரத்தின் நன்னிலை தன்னில் கண்டவர்களே வாழ்வாங்கு வாழ்வு வாழ்வர்.

*ஜீவசகோதரி சரசுபதி:* பாஷைகள் பல பேசினாலும் வலியால் அவதியுறும் போது தாய் பாஷையே முன்னிற்கும். பாஷை வேறானாலும் வலி உணர்வு ஒன்றே. பல மொழிகளில் பல பெயருள்ள ஒரு பொருள், நம் முன் வருகையில் யாவரும் ஒப்புக் கொள்வதுபோல், அறுசுவை அறியும் பல நாமங்கள் கொண்ட ஜீவனின் நிலையும் ஒன்றுதான் எனக் காண்பதே ஜென்மசாபல்யம்.

**குருபிரான் அருளமுதம்:** ஓம் எனும் ஓங்காரத்தின் நிலை உணர்ந்து, ஓம் உரு ஆன ரிஷி என்பவரே ரோமரிஷி. புனல் ஜென்மம் எனும் கங்கை நீராடி பாவம் போக்கும் சுத்தப் பிறப்பு பெற்று, ஓங்காரத்தின் னிலை உணர்ந்த மக்களாக ஆதி மார்க்க னீதி அவை மக்கள் உள்ளனர் என குருபிரான் அருளி, தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**13-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **வீடான வடமேரு கிரியினிட பாதம்...** என்ற மெய்ன்னிலைப் போதம் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* அசைவற்ற நிலையிலிருந்து நம்மை ஆண்டு கொண்டு இருப்பவர்களே ஆண்டவர்கள். நம் கடத்துள் இருந்து நம்மை பிரகாசிக்கச் செய்யும் அவர்களே கடவுள். தோற்றத்திற்கு வந்து அழியக்கூடிய பொருள்கள் எதுவும் உன் தெய்வம் அல்ல என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். விஸ்வரூபம் என்பது ஊனக்கண் கொண்டு காணாமல் அறிவுக்கண் எனும் மூன்றாவது கண் கொண்டு காண்பதாக உள்ளது. தத்துவங்களுள் தலையான தத்துவம் மனித தோற்றமே. எழுவகை தோற்றத்தில் இல்லாத ஒன்றை தோற்றத்திற்கு கொண்டு வருபவர்களே மெய் குருபிரான். ஆகம விதிப்படி உள்ள கோவில்கள் யாவும் மனித தத்துவத்தை வைத்தே உண்டாக்கப் பெற்றுள்ளன. ஆனாலும் தத்துவம் கடந்த பிரகாசப் பொருளாக ஒவ்வொரு மனுத் தலையிலும் காரண தேகமாக விளங்குபவனே இறைவன்.



Copyright © AMNA Trust, Chennai 

இந்த அனித்திய தேகம் இருக்கும்போது பெறுவதே முக்தி. இதனை நிஜமாக ஆக்குவதற்கே பெரியோர்கள் யுகந்தோறும் யுகந்தோறும் வருகிறார்கள். ஆலவாய் திறந்து ஆலங்காட்டும் ஆசான் அவர்களே நம் அறியாமை திரையகற்றி அறிவுப் பிரகாசத்தில் ஆக்குகிறார்கள்.

**குருபெருமான் அருளமுதம்:**

மெய்ஞ்ஞானத்தின் ஒட்டுமொத்த அடிநாதமாகிய அடி வேர் அறியாமைக்குள் தான் இருக்கிறது. நமக்கு ஒன்றுமே தெரியவில்லை என்ற எண்ணமே ஞானத்தின் முதல் படியாக உள்ளது. இந்த உடல்தான் **நான்** என்பது அறியாமை. உடல் கடந்து இருப்பவனே **நான்** என ஆசான் அருளால் அறிவதே அறிவு. நமக்கு ஒன்றுமே தெரியவில்லை என்பது, ஒன்றாக இருக்கும் ஒரு பொருளை நாம் அறியவில்லை என்பதே ஆகும். மனிதனுக்கு இறைவன் வழங்கிய பேராற்றல், இவ்வுலகை படைத்த கர்த்தாவை அறிவதற்கே. தாயின் மிக்காங் கருணையுடன் வரும் குருபெருமானே நம் அறியாமை அகற்றி அறிவை புகட்டுகிறார்கள். சாலை ஆண்டவர்கள் தாங்கள் அருளிய பாடல்களின் காப்புச் செய்யுள் யாவற்றிலும் அப்பாடலின் ரத்தின சுருக்கத்தை அருளியுள்ளார்கள்.

மனிதனை பிரகாசிக்க செய்யும் ஒளியினையே அருட்பெருஞ்ஜோதியாக, பஞ்ஞாட்சரமாக ஆண்டவர்கள் ஐம்மணிப் பொதிகையில் அருளியுள்ளார்கள். ஆசானின் அருளமுதம் நம் செவியில் புகும் அந்-நேரமே அரை நொடிக்குள் மலமகற்றும் தீட்சையாக உள்ளது. ஐம்புல உணர்வின் மூலம் அனுபவித்தது நானெனும் ஜீவன் என்றாலும் உடலின் உள்ளுறுப்புகளை இயக்கும் பொழுது அதுவே பரமாத்மாவாகவும் உள்ளது. கூர்ந்த ஒன்றாகிய அறிவே கோடியாக பிரிந்து நம் எண்ணமாக மனமாக குணமாக விரிந்து நிற்கிறது. ஐம்புல நுகர்வுக்கும் அப்பாலாகி, பார்க்காமல் பார்த்து கேட்காமல் கேட்டு சுவைக்காமல் சுவைத்து நுகராமல் நுகர்ந்து உணர்வதே ஃ எனும் பிரம்மமாக உள்ளது. இதனை செயலாக அறிந்து உணர்ந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாக உள்ளனர். தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**13-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**செல்வச்சீர் னபியை அந்நர்மா முகமாய்த் தெரிசனை காண்பதும் திடனே...** என்ற குருமணி மாலை தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி சுமதி:*

**சீவன் என சிவன் என்ன வேறில்லை**
**சீவனார் சிவனாரை அறிகிலர்**
**சீவனார் சிவனாரை அறிந்தபின்**
**சீவனார் சிவனாயிட்டு இருப்பரே** **(திருமந்திரம்)**

ஜீவாத்மாவுடன் பரமாத்மாவும் சேர்ந்து பொதியப் பெற்று, தன்னுடைய ஜீவனின் நாமத்திற்குரிய நீதியெனும் பொருள் அறிந்து, ஆனவனே மனு. அறியாதவன் நரன். நீதி என்பது மனிதனிடம் ஜீவனாக, ஆறாவது அறிவாக, இறை பொருளாகவும், அது குடியேறியதன் அடையாளமே சத்தமாகவும் உள்ளது. ஜீவன் அவாவுடன் தாவி கீழ் நோக்காக சார்ந்ததின் வண்ணமாக செல்லும் போது மனமெனும் பாசமாகவும், மேல் நோக்கமாக செல்லும்போது பதியெனும் இறைவனாகவும் உள்ளது. ஜீவனும் சிவனும் ஒன்றென அறிவதுவே மெய்ஞானம். இதையே குருவும் சிவனும் ஒன்றென்கிறது குருகீதை. மூன்றாவது கண்ணையும், ஆறாவது அறிவையும் நமக்கு உணர்த்த வல்லவரே மெய்குருபிரான். **வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்** என்பது சர்வ மக்களும் அதனுள் நுழையும் வாய்மையாக உள்ளது. அவ் வாய்மைக்குள் ஆகிக் கொள்வதே ஒவ்வொரு மனுவின் தலையாய கடமையாக உள்ளது.

*ஜீவசகோதரி சருபா:* **வீசும்விழி காந்நுமதி மண்டலமும் கடந்து... (மெய்வழி னூல்)** ஒரு மெய் ஆசானின் தயவால்தான் நாம் அகமியத்தில் சூரிய சந்திர மண்டலங்களை கடந்து, முப்பாழ் கடந்து, முப்பாலறிந்து, ஞான ஆகாய பெருவெளியை அடைய முடியும். அவர்களே நம் காலம்



Copyright © AMNA Trust, Chennai 

வீணாகாத ஜோதி என்ற மகமூதாகிய திருப்பதி சிகரமும், அடி முடி னடுவின் ரகசியமும் காட்டி சேதி அடையாளமாகிய நாமம் புள்ளியையும் அறிய வைக்கிறார்கள். நெருப்பாறாக விளங்கும் இவ்வுலக வாழ்வை கடக்கும் மயிர் பாலத்தை ஆசான் அருளும் ஓரறிவு நிலை கொண்டே கடக்க முடியும். கடந்தால் அவ்விடமே செத்திடமும் பிறந்திடமும் இனிச் சாகாதிருக்கும் இடமாகவும் உள்ளது. **யார்க்கு மேதிசை னாதமும் வாய்க்கவும், மார்க்க னாதரின் மாமுறை யீடிதே** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி திசை காட்டும் கருவியான ஆசானின் வாய்மைத் துணை கொண்டே தீன் எனும் திருவடி தாள் சேர்ந்து பிறவிப்பிணி தீர்க்க முடியும்.

*ஜீவசகோதரி செஜிதா:* மனதை கவ்வுகின்ற அலைகளே மனக் கவலை. இவ்வலைகள் ஓய்ந்து சும்மா இருப்பதே சுகம். பெற்றெடுத்த குழந்தையை பேணும் அம்மாவின் நிலையை விட சும்மா இருப்பதே கடினம். **கட்டுக் கடங்கா மனப்பரியைக் கட்டும் இடத்தே கட்டுவித்து...** என வள்ளலார் அருளியுள்ளபடி மனமாகிய குதிரையை உள்ளமாகிய கையில் கட்டுமிடமே கைலாயம். மனதின் லயத்திற்கு ஏற்ற மூச்சு என்பதும், சுவாசம் என்பதும் வேறு என்பதை ஆசானின் அருளால் அனுபவத்தில் தான் அறிய முடியும். ஒரு மெய் குருபிரானின் முன்னிலையில் நம் மனம் சலனமற்று சொல்லற்று சும்மா இருப்பதே சொல்லற சும்மா இருத்தல், தூங்காமல் தூங்கி சுகம் பெறும் பேருறக்க நிலையெனும் துரிய நிலை, சலனமற்ற மனதுடன் நிர்குணமாகி இருக்கும் நிர்விகல்ப நிலை யாவும் நம் அகமியத்தில் அறிந்திட தன்னை அறிந்த மகத்துக்களின் தயவு ஒன்றே துணை.

*ஜீவசகோதரர் சொர்ணமதி:* பயம் என்பது மனம் சார்ந்த ஒன்றாகவும், பயமின்மை என்பது அறிவு சார்ந்த ஒன்றாகவும் உள்ளது. மரண பயத்தின் முன் செயலற்றுப் போகும் அறிவை, ஆசான் அருளால் காலனை வெல்லும் காலாதீதனாக மாற்றிக் கொள்வதே முக்திக்கான வழி.

*ஜீவசகோதரர் ரிஷி:* தெய்வம் உண்டு என்றாலும் இல்லை என்றாலும் இன்பமும் துன்பமும் யாவருக்கும் ஒன்றாகவே உள்ளது. கோவில்களும் அதில் பொதிந்துள்ள மனித தேகத்தின் ரகசியங்களும், இறைவனே குரு வடிவாக வந்து அறிவிக்கும் போதே அறிய முடியும். எழுவகை தோற்றத்தில் இல்லாத நரன் என்பவனை தோற்றத்தில் உள்ள மனுவாக்கி தேவனாக்கி தோற்றமில்லா இறைவனை அறிய வைக்கும் கல்வியே மெய்க்கல்வி. அதனை பழக்கி வைக்கும் ஒரு மெய் குருபிரானின் அருளே காருண்யமாக உள்ளது. அவ்வருளே இல்லறம், கிரகஸ்தன், சன்னியாசி, பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், துறவறம், அறம், சமத்துவம் எனும் நிலையறிந்து நற்கதி பெறுவதற்கான வழியாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனம் தெளிந்தவருக்கே ஜீவன் சிவலிங்கம். ஜீவனும் சிவனும் ஒன்றென அருளும் ஆசானே குருவாக வரும் சிவன். அடி-முடி-நடுவின் ரகசியம் உணர்த்தும் சிவலிங்க தோற்றமே மனிததேகம். ஆசான் அருளால் தன் ஜீவனை அறிந்தவர்களே ஜீவாத்மா. அனைவரிடமும் அவரவருள் அசையா நிலையிலிருந்து ஆண்டு கொண்டிருக்கும் பொருளே ஆண்டவர்கள். வேத வேதாந்தங்களில் பெரியோர்கள் அருளியுள்ள பரிபாஷை நம் அனுபவத்திற்கு வரும்போதே செயலாகிறது. அகமியத்தில் மனம் அடங்கிய செயலே விழிப்பாகவும், அடங்காமல் புறத்தில் அலைவதே உறக்கமாகவும் உள்ளது. ஆசானின் னன்னாத ஒலியே நம் அறியாமை அகற்றும் ஒளியாக உள்ளது. அறியாமையால் அடையும் அவஸ்தை உணர்ச்சியாகவும், அதனை அறிந்து, தெளிந்து அதிலிருந்து விலகிக் கொள்வது உணர்வாகவும் உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:**

**அழியா னிலத்தாள்கை** என்பதனை ஆசான் தயவால் அறிந்து அவர்களின் ஆசீர்பாதத்துடன் அறிக்கை செய்பவர்களே ஆண்டவர்களின் சந்நதி. நமக்கு ஒன்றும் தெரியாது என்பது ஆண்டவர்களுக்கு மிக நன்றாக தெரியும். ஒன்றாக இருக்கும் அவ்வொன்றை அறிவிக்க வந்தவர்களே குலதெய்வம் என அருளி குருபிரான் அவையை இனிதே நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

### 17-08-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
### தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

சாலை ஆண்டவர்கள் அருளிய **திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே...** எனும் குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அத்வைதம் எனும் அமானிதம் ஆகிய அறிவே மனிதனிடத்தில் சுயம் பிரகாச பொருளாக, செல்வச் சீர் நபியாக, தோன்றாத் துணையாக உள்ளது. அதனை அவரவர்க்கும் சொந்தமாக்கும் செயலே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாக உள்ளது.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 119 :** துவிதம் எனும் சந்தேகம் ஒட்டாத, நாம் கொண்டு வந்துள்ள மெய்ச்சாரமாகிய இம்மெய் நெறியில் பிறர் செயல் ஒட்ட விடாது, உங்களை பையப் பைய மாசு மறுவற்ற மெய்வழி மேட்டில் ஏற்றுவதே எம்முடைய ஒரே நோக்கம்.

**குருபிரான் அருளமுதம்:** துவித முறை இல்லாத நேர்மை ஓர்மை துலக்கம் கொண்டு அருளும் மெய்ச்சாரமே, மெய்வழி வழிபாட்டு முறையில் நின்றநிலை பெயராது யாரும் கணிக்கொணா வல்லமையுடன் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் படிநிலைகளை உணர்த்தும் மெய்ச்செயலாக இருக்கிறது.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல்** வள்ளுவர்பிரான், ஏழு சீர்களுடன் 1330 திருக்கொரலாக ஜீவனின் ரகசியமாக அருளியுள்ளதை, சாலை ஆண்டவர்கள், கல்மனமுமே கரையும் இருபது திருக்கொரலாக அருளியுள்ளார்கள்.

**கடவுள் வாழ்த்து:** தமிழ் மொழியில் உள்ள **அ முதல் ஔ** எனும் 12 உயிரெழுத்தும், 12 இராசி நிலைகளாக அவரவரின் ஜீவனாக கடவுளாக இருக்கும் சிறப்பை அறிவிப்பதாகும்.

**வான்சிறப்பு:** கடல் நீரை மாற்றி மண் செழிக்க வைக்கும் மழை போல், நரனாகிய நம் மனதின் விஷம் முறித்து மனுவாக்கும் ஆசானின் கொண்டல் வாய்மையின் சிறப்பை அறிவிப்பதாகும்.

**நீத்தார் பெருமை:** மரணம் நோக்கிய நம் பயணத்தை உணர்ந்து, உலகப் பற்று நீத்து, மனதின் அறியாமை அகற்றி அறிவாக மாற்றும் செயலை அறிவிப்பதாகும்.

**அறன் வலியுறுத்தல்:** மனதை அலையாமல் பாதுகாக்கும் அறச்செயலுக்கு அரணாக இருக்கும் ஆசானின் வாய்மையின் மேன்மையை அறிவிப்பதாகும்.

**இல்வாழ்க்கை:** இல்லறமே நல்லறம் எனும் அறம் சார்ந்த அகமிய வாழ்க்கையை ஆசான் அருளால் அறிந்து வாழ்வதாகும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகுஅணி சித்தர் - பாடல் எண் 26: தாயைச் சதம் என்றே தந்தையரை ஒப்பென்றே...** மனம் போன போக்கில் மதிமயங்கி விதிவசத்தில் வாழும் வரை தாயும் தந்தையும் அனைத்தும் சதம் என்றே எண்ணுவர். **யாரும் சதமல்ல னின்தாள் கச்சி ஏகம்பனே** என பட்டினத்தார் அருள்கின்றார். சாலை ஆண்டவர்கள் **தாய் என சுவையும் தந்து தந்தையாய் பயிற்றுவிப்பர்** என குருவின் சிறப்பை அருளியுள்ளார்கள். உயிருக்கு உற்ற

> *துஷ்கரமும், வியாதியைத் தருவனவும், னெடுங்காலம் அப்பியசித்தும் மலம் னீங்க ஏது வில்லாததும், துக்க சொரூபமும், ஜயித்தற் கரியனவுமாகிய னூற்றுக்கணக்கான பிராணாயாமங்களாலும், அனேக கரணங்களாலும் யாது பயன்? எது உதயமாயின் வலியுள்ள வாயு தானே னசிக்குமோ அதனை அக்கணத்திலேயே அடைய - னாசிக்கு வெளியே மூச்சு ஓடா சகஜ சுபாவமுள்ளவராய்த் தனித்து ஒப்பற்று விளங்கும் குருவை அனுதினமும் சேவிக்கவேண்டும்.*
>
> ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

சுவை அருளும், குருபிரானே தாயாகவும் தந்தையாகவும் அழியாச் செல்வம் அருளும் அவர்களின் வாய்மையே வேதத் தாயாக மரணமிலாப் பெருவாழ்வை அருள்வதாக உள்ளது.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **அருட்பா அகவல் - அவ்வியம் ஆதியோர் ஆறும் தவிர்த்த பேர் அவ்வியல் வலுத்தும் அருட்பெருஞ்ஜோதி.** அக புற கரணங்களாலும் குணத்தாலும் அல்லலுறும் மனிதன் நம்பிய தன்னுயிரை தற்கொலை செய்கிறான். ஆசான் அருளால் அவ்வாகிய ஓரறிவெனும் மூலமணிப் பதியில் சார்ந்து அருட்பெருஞ்ஜோதியாக வாழ்வதையே வள்ளலார் அகவலாக அருள்கிறார்கள். இதனை சாலை ஆண்டவர்கள் **தௌஹீது மக்காம்** என்ற பாடலில் கீழ் நோக்கமான னபுசுகளின் நிலைகளை மேல் நோக்கமான சிபத்துகளாக மாற்றும் திக்கீர்களை விவரித்து, **அவ்வுமுதல் வாங்ங வாங்ஙோ** என அகவலாக அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்: தெய்வ தேடுகூடகம் பக்கம் எண் 239 – தொடர்ச்சி:**

தேடி அடைய வேண்டிய பொருள் அகத்தில் உள்ளதால் அதை நாடு அகம் என்கிறார்கள். உள்ளமாகிய கைலாயம் செல்ல ஆசானின் என்றும் தேயா நிலத்தின் துணை வேண்டும். பொங்குமாங் கடலாகிய உலக நெருப்பாறு என்பதை மயிர்ப்பாலம் மூலம் கடத்தும் வல்லமை உடையது ஆசானின் பூந்துறை னன்னாடு. கொம்பு, தம்பூர் என்ற வாத்தியங்கள் ஊதுவதும் அதன் மூலம் ஏற்படும் கதியும், வீணையின் மேல் மகராசி வைத்த கையால் சங்கு முழங்குவது யாவும் அகமிய ரகசியமாக உள்ளது. மனோன்மணி, ஜீவமணி, சிரோன்மணி எனும் முத்தாரமும் கடந்து **வாழும்கலை வல்லவரிடத்தில் வந்நனம்** என்பது வணக்கம் என்றாலும் வந்த னம் நிலையை குறிப்பதாக உள்ளது. நமக்கு ஆரமாக முடிவற்ற வாழ்வைக் குறிப்பதே னமஸ்காரம். துறைமுகப்பினிலிருக்கும் துவாரகாளின் இருப்பிடமே திருப்பெருந்துறை. அது கடந்து **பிறந்நிளந் நென்னீர்** அருந்நி இளைப்பாறும் அகமிய இரகசியம் யாவும் அவரவரும் ஆசான் அருளால் அனுபவத்தால் அறியவேண்டிய ஒன்றாக உள்ளது என குருபிரான் அருளி, தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 19-08-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே வுருவெடுத்துப் பாரிடைக் குருவாய் வந்ந…** என்ற தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்நர்:* பரமனாகிய சிவபெருமானே பாரிடை குருவாய், துறவலர்க்கு அரசராய், தொன்மறை புகழும் தேவராய், மார்க்க னன்னாதராய் வந்து உலக மக்களுக்கு அழியாத் திருப்பாத இரகசியங்களை அருளி, மறைமணி ஞான வாழ்வாகிய மரணமிலாப் பெருவாழ்வை வழங்கி கொண்டிருக்கிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 141 - 142 :** *எழுதாமறை:* ரூபத்தில் வந்து நிற்கும் வந்ந வேதமாகிய உனது ஆசரியரே எழுதாமறை என்ற தெய்வத் திருவாக்கின்படி, வேதம் என்பது ஏட்டில் எழுதாத எழுத்தென்னும் ஏகனாயக தத்துவாதீதமாக உள்ளது என்பதை புண்ணிய உருவாக வரும் ஆசரியர் அருளிய பிறகே அறிய முடியும். அழிதேகத்தின் சிற்றின்பங்களை பெரிதென எண்ணி துயருறுவது அனித்தியம் என்றும், ஆசான் அருளால் சுக சொரூபத்தை கைபோட்டு துயரறுத்து பேரின்பம் அடைவதே னித்தியம் என்றும் வேதம் கூறுகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் : ஹீப்ரு - அதிகாரம் : 5 திருவசனம் : 12, 13 & 14** *போதகராய் இருக்க வேண்டிய உங்களுக்கு தேவனின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியுள்ளது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள்…* காலச் சக்கரத்தின் இரகசியமறிந்து காலாதீத எல்லையில் குடியேறியவர்களே தேவனின் உபதேசங்களை உணர்ந்த பூரண வயதினராகி புலன்களை பொறியெனும் அறிவாக மாற்றிக் கொள்கின்றனர். மற்றவர்கள் காலக் கோள்களின் பிடியில்



Copyright © AMNA Trust, Chennai 

சிக்கி, தேவனுடைய உபதேசங்களை உணர முடியாத, பாலை உண்ணும் குழந்தைப் பருவத்திலே இருக்கிறார்கள் என்பதையே இத்திருவசனம் உணர்த்துகிறது.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச் சட்டை னாயனார் அருளிய முன் ஞானம் - பாடல் எண் : 10 உன்னி நின்ற மூல முதலாறும் பார்த்தே...** ஆறு ஆதாரத்திற்கு மூலமாகவும், முழுமுதற் பொருளாகவும் விளங்குபவர் மூலாதார கணபதியாகிய ஜீவன். ஆசான் அருளால் சின்முத்திரை எனும் சாம்பவி முத்திரை கொண்டே அவரை தரிசிக்க முடியும். பகலிரவற்ற, காலன் அணுகா, அறியாமை இருள் மரிக்கச் செய்யும் கன்னியா குமரியாக, பத்து வயதான கன்னியாக இலங்கும் காலாதீத எல்லையில் உயிர் தமிழின் உன்னதமுடன் நம்மை குடியேற்றி வைப்பவர்களே மெய் ஆசான்.

*ஜீவசகோதரர் கோபி :* **பரிணாம வளர்ச்சி (கைபேசி)** அன்றாட வாழ்வின் ஓர் அவசியமான கைபேசியால் பயன்கள் பல இருந்தாலும், பாதிப்புகளும் பல உள்ளன. அத்தியாவசிய தேவைகளான தொலைதொடர்பு, பண பரிமாற்றம், தகவல் சேகரிப்புக்கென பாதுகாப்புடன் பயன்படுத்த வேண்டிய கை பேசியை (Mobile) பொழுது போக்கும் விளையாட்டு, அறியாமையை விதைக்கும் செய்தி என மன அமைதியை கெடுக்கும் விஷயங்களில் ஈடுபடுவதை தவிர்த்து, ஒரு கூரான கத்தியை உபயோகிப்பது போல் மிகுந்த கவனமுடன் கையாள்வதே சிறப்பு.

*ஜீவசகோதரி சரஸ்பதி :* மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்ற மெய்ச் செயலை குரு அருளால் பெற்று, தான் அறிவு வடிவு என்பதை உணர்ந்தவர்களே குறை மனத்து பிழை ஒதுக்கி பழகித் தேர்ந்த குருகுலா அதிபர்களாக திகழ்கிறார்கள். இதற்கான உதாரணமாகத் திகழ்ந்தவரே புத்தரின் சீடரான போதி தர்மர்.

*ஜீவசகோதரர் சங்நர் :* **தெய்வத் தேடு கூடகம்: வானெடும் பிறவியரே - கலை வல்லார் கூறிய பாதையிலே** ஆசானின் ஓசை கொண்ட நடனத்தால் னேரிய சீட்டினைப் பெற்று அறுபத்து னான்கு கலைகளுக்கும் மேம்பட்ட கலையை அறிந்த கலை வல்லார்களின் பாதையில் சென்றே தெய்வத்தை அகமியமாக தேடி கூட முடியும். தேவ இரகசியம் உணர்த்தும் தெய்வத் தேடு கூடகத்தின் மெய்ச் செயலை மெய் குருபிரானின் அருட் கருணையால் னாம் அனைவரும் பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழலாம் என்ற பகிர்வுடனும், தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே னிறைவுற்றது.

**20-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

வேதாந்த தேசிகர் அருளிய **அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்...** என்ற பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரி ஆர்த்தி:* காலங்கள் மூன்றையும் உள்ளடக்கிய உடல்-உயிர்-ஆன்மா சேர்ந்த ஒன்றாக நாம் உள்ளோம். முப்பொருள் கோல விளக்கமே வேதமுடியாக மனிதனிடத்தில் அறிவின் ரகசியமாக, செம்பொருளாக உள்ளது. அறிவுக்கொடையை அளிக்கும் கொடை வள்ளலாகிய குருவின் அருட்பிரசாதத்தைப் பெற்றால் பாவத்திலிருந்து மீண்டு நற்கதி அடையலாம்.

*ஜீவசகோதரி கனகத்தாய்:* உலகில் கொடி என்பது பல அடையாளத்தை உணர்த்தும் பொருளாக உள்ளது. கோவில்களில் ஏற்றும் கொடி, கீழ் நிலையில் உள்ள ஆன்மாவை உயர்நிலையில் ஏற்றி வைக்கும் ஓர் அகமியச் செயலை உணர்த்தும் உயிரொட்டிய ரகசியமாக உள்ளது. அகமியத்தில் கொடியேற்றும் இடம் மக்களின் நினைவெனும் ஆகாய வெளியாகவும், உணர்வானது கொடிக் கம்பமாகவும், உயிராகிய பிராணனே கயிறாகவும், ஆசானின் சீதக்களப செந்தாமரைப் பூம்பாதமே ஜோதி கொடியாகவும், அதனை கீழ் நோக்கமாகிய மனதில் இருந்து மேல் நோக்கமாகிய அறிவாக ஏற்றக்கூடிய ஆளாகவும் நாம் உள்ளோம்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சோலையப்பன்:* ஞானத்திற்கான நான்கு படி நிலைகளில், நமது இணங்கிய சுபாவம் பார்த்து ஆசான் உள்ளம் சரி என ஏற்பது **சரிகை**யாகவும், ஆசான் அருளிய வழியில் நமது கருவிக் குலங்களை அகம் நோக்கி திருப்பும் செயல் **கிரிகை**யாகவும், நமது வயது வாழ்நாள் வீணாகாமல் ஆசான் இடத்தில் ஒட்டி படிந்து பழகுவது **யோக**மாகவும், வரம்பற்ற மெய் ஞானத்தில் நிலைத்திருந்து சாதிப்பது **ஞான**மாகவும் வேதங்களில் அருளப்பெற்றுள்ளது.

*ஜீவசகோதரர் கார்த்திகேயன்:* சாலை ஆண்டவர்கள் ஆதி மான்மியத்தில் நடமாடும் ஜீவாத்மா, தாத்து, உணர்வு, காயம், சத்து, ஆவி, அவ்வு, வேகாதகால், குணம், கலை, சிற்சபை, அறிவு, கவனம் என ஜீவாத்மா நிலையையும் எதார்த்த பரமாத்மா, சிபத்து, உணர்வுகார ரகிதம், காயத்ரி, சத்தினி, சுத்தாவி, அகரம், சாகத்தலை, குணானயன்மி, கலாமலி, பொற்சபை, அறிவாகாரம், கவனாதி என பரமாத்மா நிலையையும் 13 நிலைகளாக அருளியுள்ளார்கள். இதனை ஆசான் தயவால் அகமியத்தில் செயலாக அறியும் போதே நிர்க்குண நிலையில் மனமற்று அறிவுப் பிரகாசத்துடன் ஏழுநிலை கடந்து எட்டாம் நிலையிலிருக்கும் இறைவனை அடையமுடியும்.

**குருபிரான் அருளமுதம்:**

நிழலாகிய பிம்பம் எனும் இவ்வுடல் எடுப்பதற்கு ஜீவாத்மா, பரமாத்மா எனும் இரண்டு நிலைகள் வேண்டும். பெரியோர்கள் னீதி எனும் வரம்புக்கோடு வைத்தே மக்களிடம் ஞானத்தை போதிக்கிறார்கள். ஆசான் அருளிய ஒழுக்கமும் பத்தியமும் கொண்டே ஞானத்தில் சாதிக்க முடியும். **பழுத்த ஞானனெறி பத்தியர்க்கு ரைத்தபதம்** என ஆண்டவர்கள் அருளியது யாதெனில் இயல்மொழி அண்ணல் உரைக்கும் இயல்பை அறிந்து இயல்பாக இருப்பதாகும்.



*ஜீவசகோதரி விஜயசித்ரா: இடம்* எனும் சொல் கூறும் பொருள் பல இருந்தாலும் நமது பொறிகள் ஓடாது இருக்கும் இடமே இடமாகும். அதுவே நமது வயது வாழ்நாள் இருக்கும் ஷேமனிதிக் களஞ்சியம். ஒலிவா மலையாகிய ஆசானின் வாய்மையின் மூலம் மறுபிறப்பு பெற்ற பின்பே அவ் இடம் நம் சொந்த இடமாகிறது. **மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினோர்க்கு ஒரு வார்த்தை சொல்லும் சற்குரு வாய்க்கும் பராபரமே**. சற்குருவின் ஓர் வார்த்தையெனும் ஒரு மொழி கீதையே பிறவிப் பிணி தீர்க்கும் சஞ்ஞீவியாகும். அறிவிருக்கும் தலமே அசைவற்ற, சுத்த திருவடியாக இருக்கிறது. குருவருளால் நம் அகங்காரம் சாகுமிடமே செத்திடமாகவும், அறிவு பிறப்பாகிய மறுபிறப்பே பிறந்த இடமாகவும், எமனை வெல்லும் இடமே இனி சாகாதிருக்கும் இடமாகவும் உள்ளது.

மனிதனிடம் ஓரறிவாகிய தெய்வம் அத்வைதம் எனும் ஏகாட்சரமாகவும், வாசி எனும் இரண்டாகவும், முச்சுடர், முக்காலம், முக்கோணம், முப்பொருள் கோலம் என மூன்றாகவும், சதுர்ப்புஜம், நான்முகன் என நான்காகவும், புலன், பொறி, தொழில், கோசம், அவத்தை என ஐந்தாகவும், ஆறாதாரம், அறுசுவை, அறுபடை வீடு, ஆறு பிறப்பு என ஆறாகவும், அமானிதம், ஏழு ஸ்வரம், ஏழு திரை, ஏழு சக்தி, ஏழு பிறப்பு என ஏழாகவும், அகரம், அஷ்டாட்சரம், அஷ்டமாசித்தி, எட்டாம் நாள் ரா ஞானஸ்னானம் என எட்டாகவும், நவ கிரகம், நவ மணிப்பதி என ஒன்பதாகவும், பத்து வயதான கன்னி எனும் பத்தாகவும், இன்னும் எண்ணில் அடங்காத ஞான நிலைகளாக உள்ள இதனை ஆசான் அருளால் அறிந்தே ஞானப்பதம் பெற முடியும். இதனை செயலளவில் உணர்ந்த மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் உள்ளனர் என்ற பகிர்வுடனும், தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**24-08-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகிவளர் யோக்கியர் களாற்புகழ் கின்ற...** எனும் தோத்திரப் பாடலுடன் அரிய மெய்ஞ்ஞான நிலையருளும் குருகொண்டலின் வாய்மையுடன் அவை மலர்ந்தது.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 120:** *எமனிடம் கொண்டுபோய்ச் சிக்க வைப்பது ஒருவனுடைய வாய்தான். அந்த எமன் பிடியிலிருந்து விலக்கி மீட்டுத் தெய்வத்திடம் கொண்டுபோய்ச் சேர்த்து வைப்பதற்குக் காரணமாய் இருப்பதும் அதே வாய்தான். அதை வைத்து ஆளுகிற விதத்தில் ஒவ்வொருவரின் உயர்வும் தாழ்வும் உள்ளது.* தேக உறுப்பின் உணர்ச்சிகள் யாவும் ஜீவ ஆட்சியின் கீழ் இருப்பதையும், அறுசுவைகளும் அடங்கி உள்ள நாவில், ஒவ்வொரு சுவையையும் தனித்தனியாக அறிவிக்கும் தூல ரகசியமும் யாரும் அறியார் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

அறுசுவை கொண்டு ஒளித்த இடம் அகாரம் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு. அகரப் பொருளாக விளங்கும் ஜீவனின் பஞ்சாட்சர ரகசியம் அறிந்தவர்களே தேவர்கள். தேவ ரகசியம் அனைத்தும் திருவெனும் அட்சரத்தினுள் திரட்டி வைத்திருந்த அதனை ஆசான் அருளும் பிரம்மவித்தை மூலமே அறிய முடியும். மெய்வழி ஆண்டவர்களின் பூரண ஆசீர்பாதத்துடன் அதனை அறிந்த மக்களாக ஆதி மார்க்க னீதி அவை அங்கங்கள் உள்ளனர். நான் எனும் அகந்தை அழியும்போதே ஞானம் கைவரவாகும். சொர்க்கம் நரகம் அனுபவிக்கும் கூடு இருந்தால் தான் கைலாசம் காண முடியும் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருவள்ளுவரின் திருக்கொரல் -**

**வாழ்க்கைத் துணைநலம்:** எமபயத்தை கடப்பதே வாழ்வு. அதனை அருளும் மெய்குருபிரானின் மெய்யறிவே வாழ்க்கைத் துணை நலமாக உள்ளது.
**புதல்வரைப் பெறுதல்:** வள்ளலாரின் கூற்றுப்படி சாந்தி எனும் சலாமத்திற்கு உரிய நிர்க்குணம் கொண்டவனே, ஒரு மெய்ஆசான் பெற்ற உற்ற புதல்வன்.
**அன்புடைமை:** அன்பில்லாத உள்ளத்தை மயானம் என்கிறார் கபீர்தாசர். அன்பாகிய சிவத்தை அறிந்த உள்ளம் கொண்டதே உயிர். ஒரு மெய்குருபிரானின் அருளால் ஜீவன் மீது நாம் வைக்கும் அன்பே நம்மை சிவமாக்கும்.
**விருந்தோம்பல்:** ஞான வாழ்விற்காக மெய்க்குருபிரான் வழங்கும் அருளமுதமே விருந்தோம்பல். இம் மெய்விருந்தை செவி வழியாக அருந்தி அனுபவிப்பவர்களே தேவர்கள்.
**இனியவை கூறல்:** தேகத்தில் பரிசுத்த ஆவியெனும் உயிர் உள்ளவரை எல்லாமே இனியவை. நித்திய ஜீவனுக்காக மெய்ஆசான் அருளும் ஜீவ உணவே இனியவை கூறல்.

**குருபிரான் அருளமுதம்:**

ராமபிரானுக்கு வசிஷ்டர் அருளிய யோக வாசிஷ்டமும், அர்ஜுனனுக்கு பகவான் அருளிய பகவத் கீதையும் - ஒருவர் பசிக்கு பிறர் உண்ண முடியாதது போல், ஒருவர் பாவத்தை பிறர் சுமக்க முடியாது என்கிறது. அரச உருவம், தேவ உருவம் உள்ள ஒரே வெள்ளி நாணயத்தில் எது உயர்வு எனும் யூதகுருமார்களின் கேள்விக்கு, இயேசுபிரான் அரசனுக்கு உரியது அரசனுக்கும் தேவனுக்கு உரியது தேவனுக்கும் என உரைத்தது, அவரவர் செய்த வினை அவரவருக்கே என்பதையும், நம் பாவங்களுக்காக இயேசு மரித்தார் என கூறும் வசனம் நிரூபிக்க முடியாதது என்பதையும் உணர்த்துகிறது.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 27: அஞ்சாத கள்ளனடி ஆருமற்ற பாவியடி...** முக்குணங்களால், கள்வனாகவும், பாவியாகவும், கொடுமை செய்பவனாக இருக்கும் தன்னை, அதிலிருந்து மாற்றி வைக்கும்படி பெரியோர்கள் தாயிடம் வேண்டுவதாக இப்பாடல் மூலம் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடுகூடகம் :**

ஒரு மெய் ஆசானின் தனிப்பெரும் கருணையால், மெய்ப் பொருளெனும் காயாபுரி கோட்டையும், வாசனை, கேள்வி, இரு கண், வாயெவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்ணும், போகாப்புனல் மேல் வீற்றிருக்கும் பிரம்மமுடி சாகாத் தலையாகவும், வேகாக் காலாகவும் நின்று விளங்கும் நிலையை அறிந்தோரே காயாபுரி கோட்டையர்கள். ஆறாறு ஆண்டுகள் கடந்து பலரை சந்தித்து அவர்கள் வினாவிற்கு விடை அளித்து, அனந்தர்களைச் சந்தித்து, வித்தில்லா வித்து விதைக்க வந்த பெருமான் தரிசனைக்கு பிரம்மகூடகர்கள் காத்திருப்பதையும் தெய்வத் தேடு கூடகமாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

*சற்குரு னாதரின் சரணங்ங ளிரண்டும் எத்திக்கில் விளங்ஙுகின்றனவோ, அத்திக்கில் - பிரியையே! னாடோறும் அன்போடு னமஸ்கரித்தல் வேண்டும்.*

***~ குரு கீதை***

**26-08-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஶ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **செல்வச்சீர் னபியை அந்நர்மா முகமாய் தெரிசனை காண்பதும் திடனே...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

செல்வ இம் மொழியை சந்தேகிப்பவர்களுக்கு வரும் பிறவிப் பிணியை தீர்க்கும் மருந்து, மெய்க் கல்வியைப் பழக்கித் தரும் நற்றாள் அறிந்த பெரியோர் திருக்கரத்தில் உள்ளது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 143 :** தங்கள் குருகொண்டலின் திருப் பார்வையின் அன்பேறும் உள்ளச்சமே இம்மெய்யை தம் தலையில் வல்லபமாக ஏற்றி வைத்தது என்றும், பெரியோர் முன் ஊமை போல பேசாது அவர்களை அலட்சியம் செய்த பாவத்தால் அறிவு பிடுங்கப்படும் நிலை வரும் **உஜார்** என்பதும் ஆண்டவர்கள் திருவாக்கு. பெரியோர் முன்பாக நாம் பேசும் பேச்சின் மூலம் நம் உள்ளம் தெளிகிறது.
**பெற்ற தும்பிற வாமை யுற்றதும் பொற்கிண் ணத்தின்பால் பெற்றதும் னற்ற வவாணி னாய கியென்றன் னாவி னிற்குடி யுற்றதும்...** மெய்யைப் பேசும்போது ஜீவன் முத்தனாவாய் என்பது ஆண்டவர்களின் ஆசீர்பாதம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்திய வேதம் - ஹீப்ரு 9:14, 11:29** *நித்திய ஆவியால் தம்மை பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவின் ரத்தம், ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனசாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்.*

*விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்து போனார்கள்.*

கர்த்தரின் நித்திய நாதத்தால், தன் அறியாமையை பலி கொடுத்து, மனசாட்சியை செத்த கிரியைகளற சுத்திகரிப்பது என்பது மனதற்ற பரிசுத்த னிலையை பெற்ற மெய்ச்செயலாகும். விசுவாசமெனும் யதார்த்த நம்பிக்கையுடன் ஆசானின் வாக்கை கைக் கொள்கிறவன் பிறவியெனும் சிவந்த சமுத்திரத்தை, உலர்ந்த தரையில் நடப்பதைப் போல் எளிதாக கடக்கிறான்.



Copyright © AMNA Trust, Chennai	

**குருபிரான் அருளமுதம்:**
காணிக்கை, பலியிடுதல், குர்பானி யாவும் சகல மதங்களுக்கும் பொதுவானது. பிரளயமும் அழிவும் வேறு வேறாகும். னீதியான பிரளயத்தை நடத்தும் பிரளயச் செம்மல்களே, நம் அறியாமை அகற்றி **நானே உலகின் ஒளி** என்ற தன்னை அறியும் ரகசியத்தை அறிவிக்கும் கர்த்தராகிய குரு. அவரின் வாய்மைக்குள் ஆனவர்கள் பாக்கியவான்கள்.

**தெய்வத்தேடு கூடகம்:** கணித்தற்கரிய கலைகள் 64க்கும் மேலான காலமற்ற இடத்தில் குடியமர்த்தி அருளப் பெற்ற பாடலே **ஆதிம னுமகன் என் தெய்வமே.** ஆதியை ஜோதியாக அறிந்தவர்களே ஆதி மனுமகன். அவர்களே வெவ்வேறு னாமம் பூண்டு வந்து சேதியின் அடையாளமாகிய னாமம் புள்ளியெனும் செம்பொருளை னீதியாக நம்மிடம் நடவு செய்கிறார்கள். அறுசுவை ஒளிக்கும் இடம் அறிந்த அமரராக்கி சம்மதத்தின் ரகசியம் அறிய வைக்கிறார்கள். அறியாமை திரை விலகியதும், சிந்தாமணி எனும் சிற்சபையின் தேவரகசியம் அறிந்து முத்தி முகப்பு கடந்து அரங்க முகப்பில் இருக்கும் கொண்டலிடம் எட்டாம் நிலையிலுள்ள இறைவனிடம் சேர்க்க பிரம்மகூடகர் வேண்டுகிறார்கள். சன்னிதி சேர்த்து பரிசுத்த ஆவியை தரிசிக்கப் பெற்று வந்த ஒப்புதல் சீட்டானது உள்ளத்து ரகசியம் பொதிந்த அவரவர் முகத்தில் உணர்வாக, ஓங்காரமாக உள்ளது. பரிசுத்த தேவ ஆவியை செவி வாயிலாக தரிசித்து, களைப்பாறி காலமற்ற இடத்தில் அரிதுயில் கொண்டு தேடி வந்த பரம் பொருளுடன் இரண்டறக் கலந்தனர் பிரம்மகூடகர். உடலும் உயிரும் அறிவும் உள்ளபோதே பேரின்பனிலை பெற்று வாழும் ஆசீர்பாதம் பெற்ற மக்களாக நம்மை ஆக்கி வைத்த பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**27-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

*ஜீவசகோதரர் கௌதம்:* உலக காரியத்தை அறிவதில் நாம் காட்டும் ஆர்வம், வேதங்கள் கூறும் னீதியெனும் இறை பொருள் நம்மிடம் இருப்பதை அறிவதில் ஆர்வமின்றி உள்ளோம். தன்னை அறிந்த தவசிரேஷ்டர்களின் தயவால்தான் அதனை நாம் அறிய முடியும். கங்கையை ஆள்கின்ற கங்காளனாக வரும் குருபிரான் பூசும் மங்காத கவசத் திருநீறு கொண்டே அதை நாம் அறிந்திட ஏதுவாகும். விண்கலங்கள் கொண்டு விஞ்ஞானிகள் அறிய முயலும் சந்திர சூரியனை, மெய்ஞானிகள் அகமியத்தில் கண்டுணர்ந்த செயலை, ஆசான் கிருபையால் தான் அறிய முடியும். எதார்த்த னன் மனத்துடன் ஓர் மெய்ஆசானிடம் தஞ்சம் அடையும் போதே உயிரொட்டிய ரகசியமான சமத்துவமும், சமாதானமும், சாந்தி எனும் சலாமத்தும் நம் கைவசமாகும்.

ஆறாவது அறிவை அறியாத வரை ஐந்தறிவு நுகர்வில்தான் நாம் உள்ளோம். ஆறாவது அறிவை அறிய வைக்கும் ஆசானின் அருளே, நம் மனதின் கீழ் நோக்கத்தை மேல் நோக்கமான அறிவாக மாற்றுகிறது. அம் மேல் நோக்கமான இடமே எண்ணாயிரம் கோடி காலம் இருந்தாலும் சலிக்காத பேரின்ப னாடாக உள்ளது. அகர வடிவாக வரும் ஆசான், தன் பெருங்கருணையால், நம் மூன்றாவது கண் திறந்து, நம் அகரப் பொருளையும், எண்ணிலடங்கா இறை பொருளின் நிலையையும் உணர வைக்கிறார்கள். மாறிக்கொண்டே இருக்கும் இத் தேகத்தில் மாறாதிருக்கும் ஆண், பெண்ணற்ற அவ் வடிவான பதாம் பூரணியை, தன் பெருவெளியாகிய சாலையில் அறிந்து அடைவதுவே ஜாதி மனுக் குலத்திற்கான ஜென்ம சாபல்ய செயல்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* சொல்லரிய பொருளாகிய, வித்தில்லா வித்தெனும் ஆசானின் திருவாக்கே பொய்யும், மெய்யும் பிரித்துக் காட்டி, நம்மை காக்கும் அரணாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அறியாமையை அறிவதே அறிவு. அறிவிருக்கும் தலம் அறிவதே நம் ஆவி வீணாகாமல் காக்கும் செயல். ஆத்மாவாக இருக்கும் நாம், ஆசான் அருளால் ஜீவாத்மா நிலை பெற்று, பரமாத்மாவிடம் சேர்வதே னித்திய அறம். அவ் அறச்செயல் அருளும், நம் தலை காக்கும் ஆசானின் செயலே தர்மமாகும். தலைகாக்கும் தர்மத்தை இனமாகப் பெற்று இன்புற வாழும் மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் திகழ்கின்றனர் என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.


Copyright © AMNA Trust, Chennai September 2023

**27-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி கல்பனா:* இறைவனின் சாயலாகிய மெய்ஆசானின் வாய்மையே வித்தில்லா வித்தான அறிவாக விளங்குகிறது. சர்வ படைப்பிற்கும் மூலமான பஞ்ச பூதங்களை உண்டாக்கியதும் அதே வித்தில்லா வித்துதான். அதுவே நரனாக உள்ள ஒருவனை மனிதனாக்கி தேவனாக மாற்ற வல்லது. பளிங்கி எனும் கண், உணர்வு, வாய், கந்தம், இந்நான்காலும் அறிவது வித்தாகவும், வித்தில்லா வித்தை அறிவது தேவ யோனியாகவும் உள்ளது. தனது குருபிரானையே வள்ளல் பெருமான் அருட்பெருஞ்ஜோதியாக அருளியுள்ளார். குருவின் அருளே, மனிதன் தான் வாங்கி வந்த சீதனக் கடனாகிய ஆறாவது அறிவை அறிய வழி காட்டுகிறது. ஆசானின் பெருங் கருணையும் பேரிரக்கமுமே ஜீவ ரட்சிப்புக்கான ஒரே வழி. குருபிரான் தன் பரிசுத்த ஆவி கொண்டு ஜீவ சுவாசத்தை ஊதியே மனுவைப் படைக்கிறார்கள்.

**ஆதியிலே இருந்த வார்த்தை தேவனாகவே இருந்தது அதனை காது உள்ளவன் கேட்கக் கடவன்** என சத்திய வேதத்தில் கூறப் பெற்றுள்ளது. பரமவித்தாகிய இறை பொருளே யாரும் கட்ட முடியாத திருமாளிகையாகிய மானிட சட்டையை தாயின் கருவறையில் கட்டுகிறது. நம்மை படைத்து காத்து ரட்சிக்கும் பரமவித்தாகிய நற்றாளின் ரகசியத்தை அறிதலே பிரம்மவித்தை. அறியாமை எனும் அவாந்தர காடாகிய மனதை, ஆலவாய் ஊற்றால் உத்தியோவன பொன்னிலமாக ஆக்குவதே காமில்களின் செயல். ஆறறிவும் ஓர் அறிவாகி அறிவுக் கண் கொண்டு அச்சமில்லா நாட்டிற்கு சென்று வரும் செயலைப் பழக்கித் தருபவரே வித்து நாயகமாகிய குருபகவான்.

**குருபிரான் அருளமுதம்:**

அன்னாட்டினுக்கு வித்தெடுக்க வரும் வித்து நாயகம் வாழையடி வாழையாக இந்நில உலகிற்கு வந்து கொண்டே இருக்கிறார்கள். அறியாமை எனும் இருளகற்றி ஜீவகோலத்தில் இருக்கும் மெய்யை உணர்த்துவதே ஓணம் பண்டிகையின் அத்த பூக்கோலமாகும். மெய்யை அறிந்த பின்தான் நமது அகங்காரம் ஜீவனாகிய அறிவாக மாறுகிறது. பஞ்ஞாட்சரம், அமானிதம், சாகாத்தலை, வேகாக்கால் யாவும் பொதியப்பெற்றதே ஞானத் தமிழாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

வாமன அவதாரம், விநாயகர் சதுர்த்தி, வரலட்சுமி நோன்பு, ஓணம் பண்டிகை எனும் சிறப்புகள் யாவும் கொண்டது ஆவணி எனும் பாடுமதி மாதமாகும். மந்திரகிரி எனும் ஒலிவா மலையே, எமனச்சம் அகற்றி சிவமாக்கும் செயலுடையது. சோதியாகவும் நீதியாகவும் உள்ள ஜீவனாம் சிற்றம்பலப்பொருளை பெரியோர்களின் இரக்கத்தால் அறிய வேண்டும். மகா மகசூக்கெனும் உள்ளங்கையாகிய இறைவன் இருக்கும் இருதயத்தின் மீது அன்பு சாய்ந்து வணங்கும் மெய் வணக்கத்தின் பயன், அறிவு சொரூபராகிய மெய்க்குருபிரான் அறிவுடன் கலப்பதுவே நம் ஜென்மப் பிணி தீர்வதற்கான ஒரே வழி.

*ஜீவசகோதரர் சங்கர்:*

ஆசானின் வாய்மையெனும் கீதையே, அறியாமைக்குள் இருக்கும் அறிவாகிய அமானிதம் எனும் அத்வைதத்தை அறிய வைக்கிறது. வைராக்கியமும் ஆர்வசித்தமும் உள்ளோர் இறைவனை அடைவதற்காக செல்லும் உய்வழி எனும் ஒரே வழியே மெய்வழியாக உள்ளது. தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai September 2023

**31-08-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**
**வான்மதிகொரல் - வாக்கியம் எண் 120 தொடர்ச்சி:** நினைவு வேறொன்றில் கவனமாக இருக்கும்போது ஊசியில் நூல் கோர்க்க முடியாது. நினைவு, கண் - இதில் நினைவே பெரிது. தேகத்தில் உள்ள அங்கங்கள் யாவையும் ஒவ்வொரு செயலைக் குறி வைத்து இறைவன் படைத்தது மதிப்பிலடங்கா பரமபத நித்திய வாழ்வை அடையவே. அதனை அறியாதவன் அழி உலக இச்சையால் இறுதியில் எமன் கையில் சிக்கி மீட்பில்லாத நரக வேதனை அடைகிறான்.

நினைவு, கண் இவற்றுடன் கவனம் என்பது ஜீவனின் ரகசியமாக, அறிவாக, அழியாத பொருளாக விளங்குகிறது. ஆன்மாவாகிய நினைவில் காலமெல்லாம் தீங்கு சேர்ப்பதை பெரியோர்கள் எச்சரிக்கிறார்கள். செயலுடைய சமரசமாக பெரியோர்கள் அருள்வது யாவும் **ஜீவனை** குறி வைத்தே. குருவருளால் எண்ணம் சொல் செயல் மூன்றிலும் நன்மையே செய்து, அறியாமை அகன்று அறிவுக்கண் திறக்கும் காலமே னீதி எனும் பிடரி கண் திறக்கும் காலம்.

**தெய்வத்தேடு கூடகம்:** அருங்கோடை பாலைவனத்தில் சகுனாதியம் எனும் எண்ணற்ற காலம் இத்தேகம் வருந்த, தன் சொந்த பொருளின் ரகசியம் அருளும் மெய் மகத்தினை தேடி வருகின்றனர் தேடுகூடகர்கள். துவாரபாலகர், குரமாது, காஷாயக் கொடி, கோகுலர்கள், காயாபுரி கோட்டையரின் குறிப்பறிந்து பிறந்தது இனி இறவாத முத்தி முகப்பில் என்றும் மங்கா வாக்கு வன்மையுடன் வரும் அவர்களை சித்திரப் பலகையின் மீது ரத்தின குவியல்களால் நிரப்ப பெற்ற கம்பளியின் மீது அமர்ந்து களையாறிட தலைவர் உரைக்கும் அவ் இடமே சிவாய மஞ்சமாகிய அறிவிருக்கும் தலமாக இலை என்னும் பொருள் இல்லாத இடமாக உள்ளது.

ஆமன் எனும் அடி- முடி - நடுவான வேத முடியெனும் இறைவனை அறிய வைக்கும் அட்சரம் அறிந்தவர்களே பிரம்மகூடகர்கள். அவரவரின் நாமத்துக்குரிய அட்சரமே ஆமன். நடுவாகிய ஜீவனைக் கொண்டே அடியும் முடியும் அறிய வைக்கும் அழியாத செயலைக் குறிவைத்து சொல்லப் பெற்றதே தீர்க்க தரிசனங்கள். வெளிச்சப் பொருளாகிய ஜீவனை அறிய, வினை விதைக்கும் மனம் அடங்க வேண்டும். பழம் பண்ணார மணி உண்டைப் பெட்டகத்தை சுமந்து பண்டாரமாக வரும் பெரியோர்கள், அதனை தங்களின் வேல் கொண்டு விரித்து அதிலுள்ள ரத்னாதிகளை போதுமானவரை அணிந்து கொள்ளுங்கள் என ஆசீர்பாத ஒலிவாயுரை தந்து களையாற்றி வைக்கிறார்கள். அக்கண்ணின் ரகசியம் அறிந்து அதனை அகமியமாக தேடி வரும் பிரம்மகூடகரின் செயலே இங்கு வர்ணனையாக அருளப் பெற்றுள்ளது என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.


Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**06-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **முடியாகிய மூமீன் என...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது. குரு கொண்டல் அவர்களின் வழி காட்டுதலுடன் பத்தியத்திடம் காப்பு செய்யுளும், **மயங்நாதிரு மனமே......காரும்தி டமுடைய காமீல ருகிருக்க மயங்நா திருமனமே** என்ற பாடல் வரிகள் வரை ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று, அவை இனிதே நிறைவுற்றது.

**13-08-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **மாயக்கூத்தின் வகை அறியாமல்...** என்ற குருஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருகொண்டல் அவர்களின் வழிகாட்டுதலுடன் **பண்டுப முத்தமறை......தேரும்தீ தாருமக்கு னேருந்நெ ரிசனமே மயங்நாதிரு மனமே** என்ற பாடல் வரிகள் வரை ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று, அவை இனிதே நிறைவுற்றது.

**குரு வா ஆழ்க ! குருவே துணை !!**

*எங்ஙே பகவான் குருசக்ரவர்த்தி வடிவில் தோன்றி விசுவத்தின் ஸ்திதி பிரளய னாடகத்திற்கு னித்திய சாக்ஷியாய் ஜாக்கிரமுள்ளவராய் விளங்ஙி னிற்கின்றாரோ, அத்திசையை னோக்கி மலர்ந்த மதுரமான புஷ்பங்ஙளால் னித்தியமும் இடையிடின்றி இவ்வஞ்ஞலி செய்யப்பெறுவதாக.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# ஆதி மார்க்க னீதி அவையின்
# 2023 – ஆகஸ்ட் மாத அவை னிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **August 2023 / சென்னை** | ஆதி மார்க்க னீதி அவை அலுவலகம் னாயகன் இல்லத்தில் குருபிரான் அவர்கள், ஈரோடு பவானியில் இருந்து வந்த மக்களை சந்தித்தார்கள். |




## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்


| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **06-10-2023 / சென்னை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் அவதார திருனாள் சென்னையில் சிறப்பாக கொண்டாடப் பெற உள்ளது. |
| **18-10-2023 / பெங்களூர்** | ஜீவதம்பதியர் மஞ்சுநாதன்- மணிமொழி அவர்களின் **புதல்வி. தீபீகா – புவனேஷ்** திருமணம், பெங்களூரில் குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் முன்னிலையில் நடைபெற இருக்கிறது. |
| **27-10-2023/ சிவகாசி** | நமது குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் சிவகாசியில் எழுந்தருளி அங்கத்தினர் மற்றும் ஞான தேட்டமுடைய மக்களை சந்திக்க உள்ளார்கள். |



Copyright © AMNA Trust, Chennai

## உற்றெழுத்து உணர்த்தல் – 2

உற்றெழுத்து உணர்ந்த மக்கள் அதனை வரும் **அக்டோபர் 10**ம் தேதிக்குள் write2amnatrust@gmail.com முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். சரியான உற்றெழுத்தை அனுப்பிய முதல் 10 அன்பர்களின் பெயர்கள் புரந்தரர் பொன்னேடாக மின்னி வரும் மின்னணு சஞ்ஞிகையில் மின்னுவது திண்ணம்.




### இடமிருந்துவலம்:

1. பிரணவ மந்திர வடிவ வினாயகர்
4. உயிரின் நட்பறியாதார் இங்கு செல்லும் நாய்க்கு சமம்
5. நாலு வகை சேனாசைதன்யங்கள்
12. நான்கு திசையும் போற்றக்கூடியவர்
15. சிவ னந்தியின் இன்னொரு பெயர்
20. பத்தியத்திற்கு வேண்டியது

### வலமிருந்து இடம்:

3. அறிவுக்கான அழைப்பு
10. இந்த சொந்த தேகம் அழியாது
11. நான்கு வேதம்
14. இப்படியான மனவீட்டில் தான் பேய் குடியிருக்குமாம்
17. காலனின் கடூர கோர எல்லையின் வேறு பெயர்
18. ஏற்றி இறக்கும் இரு காலின் பெயர்
19. ஜீவகங்கையை இப்படியும் கூறுவர்
21. கரணங்களுக்கு முன் இருப்பது
22. இந்த சொல்லே ஆரணம்
23. இப்படியான இறைவனை தேடினால் இருள் விலகும்
24. தமிழரசு நிலத்தில் நிற்கும் தெய்வப்பதி (எதிர்ப்பதம்)
26. முனிவர்கள் செய்யும் தவம்



Copyright © AMNA Trust, Chennai	

**மேலிருந்து கீழ்:**

1. ஐந்து கரத்தினனின் இன்னொரு பெயர்
2. ஆசானை குறை பேசுவோர்
3. காலம் அற்ற நேரம்
4. தீராத இந்த வறுமையும் கூட தீர்ந்து விடுமாம்
6. கோரக்கர் மூலி உண்ணும் போது இதிலிருந்து தள்ளி இருக்க வேண்டும்
9. பாக்தாத் நகரின் மருவிய பெயரின் ஒரு பாதி
13. மனோன்மணி தாயின் பெயர்
15. மேற்கு திசையை இந்த திசையில் வணங்க வேண்டும்
16. ஆசான் (கூறும் - வேறு சொல்) சொல்லே ஞானம்
21. இதன் உருவாக எழுந்ததே ஏழ் நிலைப்பாதம்

**கீழிருந்து மேல்:**

7. நீரின் தலம் ஆகிய ஆலயத்தின் முதல் பாதி பெயர்
8. விடாமல் குரைத்துக் கொண்டே இருக்கும் இது ஏழாக உள்ளதாம்
14. அருளுகின்ற ஒரு செயலுக்குரிய பெயர் ஒரு தீவின் பெயராக உள்ளது
24. வேதத்தரசனின் வாகனம்
25. மீண்டும் இந்த காலில் தான் படும்
26. தன்மை (கொடுக்கும் - வேறு சொல்) சரிகை

குறிப்பு: உற்றெழுத்து அனுப்பும் வழிமுறை: கட்டம் வரைந்து அனுப்பாமல், "இடமிருந்து வலம்.... கீழிருந்து மேல்" என்ற தலைப்புடன் அதற்குரிய எண்ணும் பதிலுமே போதுமானது.

**ஆகஸ்ட் மாதம் 2023 வெளியான உற்றெழுத்து உணர்த்தல் – விடை**

**இடமிருந்து வலம்:**

1. ஓதும் **னீதியே**
2. **அடி** முடி னடுவும்
3. **அக**னக னட்பாக
11. **னல்**ல கதி
16. **அந்**நமே சிந்நை
18. **கடந்நற**ம் பொருளுமின்பம்
19. **தன்னிட** குலமுமெது
21. **வாசி** காலுச்சி

**வலமிருந்து இடம்:**

4. **பரவச**மானந்ந வண்ட
5. தாறுமாறாக வரும் னே**ரம**து
6. வந்நவ**ரும் கன**கசபை
7. னாதன் **சன்**னிதி முன்
13. வாக**ன வான்** முகடேறி
15. அதிபா**தாளம்**
17. **ரவி** கோடி வீசும்
22. சங்நை பொருந்நும் **பதம்**



Copyright © AMNA Trust, Chennai	

**மேலிருந்து கீழ்:**

1. **னீதியான** பிரளய
2. **அகர** உகர
3. **அமரு**ந் தெய்வப் பதியே
11.**னன்**மை யெனும்
14. **வந்ந** வேதம்
16. **அந்**நெழுத்தை
18. **கடம்** மசங்கிடா

**கீழிருந்து மேல்:**

8. **இம்**மெனும் திக்கீருடனே
9. **சென்னிவழி** தானே வாய் கொண்டு
10. **மேனாட் பண்**ணிய பொய்
12. பனிமலையின் **வாசன்** வாசம்
15. **தான்** தேடி வைத்திருக்கும்
19. **தரம்** குறைந்நிடா
20. **தன்**னிலை கண்டு
21.**வாய்** பேசி வயிறு
22.காமீல் பதத்தைப் **பற்ற**



**சரியான உற்றெழுத்தை அனுப்பிய அன்பர்கள் –**

ஜீவிதா
ஜெய்குமார்
அஞ்சனா தேவி
குமரேசன்
ஹேமாபதி
மணிமொழி
ஹேமலதா
கிருஷ்ணமூர்த்தி



Copyright © AMNA Trust, Chennai

1)

## 2023 ஆகஸ்ட் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்

இன்பலதா
மாதவன்
ஸ்ரீமா
மகிமா
மஞ்சுநாதன்
சபிதா
வடிவேலன்
தனராஜன்
ஜெயப் பிரகாஷ்
செல்லம்மா
புன்னகை
சபிதா
பாஸ்கர்
உமாராணி
ராஜமகேஷ்
தியாகராஜன்
பொன்லஷ்மி
பழனிக்குமார்
மகேஷ். மதுரை
மோகன். ஸ்ரீபெரும்புதூர்
கார்த்திகேயன். ஆவடி

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ளிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 26 – Month: September 2023*